விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 046 வள்ளுவர் ஆண்டு 2055 தை 20 சனிக்கிழமை (03.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### ஜனாதிபதி ரணில் மீது நம்பிக்கை இழப்பு

# சர்வதேச நாணய நிதியம் கைவிரிக்கும் அபாயம்!

(கொழும்பு)

தனியார் கடன் வழங்குநர்களுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தி, அரசாங்கம் நம்பிக்கையைக் காட்டத் தவறினால், சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் அடுத்த தவணை நிதியைத் திரும்பப் பெறக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனா உட்பட இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் அரசாங்கம் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தி வரும் அதே வேளையில், தனியார் கடன் வழங்குநர்களு 15

### சுகாதார தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தப் போராட்டம்

#### தற்காலிகமாக வாபஸ்


(கொழும்பு)

சுகாதார தொழிற்சங்கங்களினால் நேற்று முன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையானது இன்று சனிக்கிழமை காலை 6.30 மணியுடன் நிறைவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை தமக்கு வழங்குமாறு கோரி, கடந்த 16ஆம் திகதி சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தன.

இதேவேளை ஜனாதிபதியுடன் 15

# தரமற்ற மருந்து இறக்குமதி அமைச்சர் கெஹலிய கைது



(கொழும்பு)

**முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.**

தரமற்ற மனித இம்யுனோ குளோபலின் மருந்து இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்குமாறு நேற்று முன்தினம் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றினால் அவருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

குறித்த நீதிமன்றக் கட்டளைக்கு அமைய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுக் காலை முன்னிலையாகியிருந்த நிலையில், சுமார் 10 மணிநேர விசாரணைகளின் பின் நேற்று மாலை அவர் கைது செய்யப்பட்டதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. (ந-7)

### சுதந்திர தின நிகழ்வில்

# பிரதம அதிதியாக தாய்லாந்துப் பிரதமர்



(கொழும்பு)

நாளை இடம்பெறவுள்ள 76 ஆவது சுதந்திர தின நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதாகஉள்நாட்டலுவல 15

# 5ஆம் திகதி விடுமுறை இல்லை

(கொழும்பு)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போதிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்படமாட்டாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, திங்கட்கிழமை சகல அரச 15

### நான் பதவி விலக சில கோமாளிகளே காரணம்

# மக்களாதரவு இன்னும் எனக்கு இருக்கிறது

#### கோட்டாபய ராஜபக்ஷ



(கொழும்பு)

நாட்டு மக்களின் பூரண ஆதரவோடு அமோக வாக்குகளால்தான்ஜனாதிபதியாக தெரிவான 04

# புகையிரதத்தில் மோதுண்டு குடும்பஸ்தர் உயிரிழப்பு

#### கிளிநொச்சியில் துயரம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் புகையிரதக் கடவை மூடப்பட்டிருந்த நிலையில், வீதியை கடக்க முற்பட்ட குடும்பஸ்தர் புகையிரதம் மோதி உயிரிழந்துள்ளார். 15

### தேர்தல் தொடர்பில்

# ஜனாதிபதி ரணிலை தனித்து சந்திக்க பெரமுன முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆதரவை பெற்றுக் கொள்வது தொடர்பில் தமது கட்சியுடன் பிரத்தியேகமாக கலந்துரையாடி தீர்மானமொன்றுக்கு வருமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தாம் உள்ளிட்ட சிலர் ஏனைய சில 02

# நிகழ்நிலை காப்புச் சட்டம் மனித உரிமைக்குப் பாதகம்

#### ஐ.நா பேரவை பதிவு

(ஜெனிவா)

இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டம் மனித உரிமைகள் அம்சங்களில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அலுவலகம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை மீளாய்வு செய்து சட்டத்தை திருத்தம் செய்யுமாறு 15

# பிராந்திய கடவுச்சீட்டுக் காரியாலயம் பொதுமக்களால் நேற்று முற்றுகை

#### வவுனியாவில் பெரும் பதற்றம்



(வவுனியா)

வவுனியா பிராந்திய கடவுச்சீட்டுக் காரியாலயத்தின் நுழைவாயிலைப் பொதுமக்கள் முற்றுகையிட்டமையாலும் ஒருவர் தற்கொலைக்கு முயன்றமையாலும் நேற்றைய தினம் அப்பகுதியில் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

### புத்தகக் கட்டுநர் தேவை

(புக் வைண்டிங்)

அனுபவமுள்ள புத்தகக் கட்டுநர் தேவை. ( இருபாலாரும் ) யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

**076 097 3121**



## வாகனம் வாடகைக்கு தேவை

எமது உற்பத்தி பொருட்கள் விநியோகத்திற்கு இலகுரக வாகனங்கள் மாத வாடகைக்கு தேவை.
தொடர்பு
வீய பிறைவேட் (LTD)
யாழ்ப்பாணம்

**077 623 7956**

(18875)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு காணி A9 வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
வட மாகாண சபை 300 மீற்றர்
கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

**076 788 0591 | 077 129 4999**

(18873)



## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய மேசன் மற்றும் கூலியாட்கள் தேவை.
( 8.00am - 4.00pm வரை தொடர்பு கொள்ளவும் )

தொடர்புகளுக்கு :

**076 200 4827**
**077 558 8835**

(18870)


## ஜனாதிபதி...

கட்சிகளின் உறுப்பினர்களுடனும் ஜனாதிபதியுடனும் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது இது தொடர்பில் அறிவித்ததாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் நிபந்தனைகளுக்கு ஜனாதிபதி ரணிலின் இணக்கப்பாட்டைப்பொறுத்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவுவழங்குவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-7)


## New Science Hall

Jaffna

**Physics**

**R.RAAKULAN B.Sc**

Paper Classes **2024 A/L**

ஆரம்பம் 11.02.2024 ஞாயிறு 5.30 pm - 7.00 pm
வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு

**English Medium**

**2025 A/L**

Starts From 05.02.2024 Monday

**Newton's Law**

Mon, Tues 5.30 pm - 7.00 pm

(C-8869)



## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு

**செவிப்புலன் குறைபாட்டினால் அவதிப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம்.**

மிகக்குறைந்த தொகையாக ரூபாய் 11999/= மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கி கொள்ளுங்கள். உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.

(18867)

*மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்*

**077 434 6245**




*விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே*



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 29 . 05 . 1947

இறப்பு 16 . 01 . 2023

அமரர்

### செல்லப்பா செல்வரத்தினம்

நீங்காத நினைவுகளால்
நீர்மல்கும் கண்களுடன்
மனைவி மருமக்கள் உற்றார்
உலகோர் ஏங்காத நாளில்லை
ஏன்பறந்தீர் எம்மைவிட்டு
ஆண்டு ஒன்று போனாலும்
இவ்வுலகில் நாம்வாழும் வரை
உங்கள் நினைவுகள் நீங்காமல்
நிலைத்திருக்கும்.

சரஸ்வதி சனசமூக நிலையத்தடி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

பிரிவுத்துயரில்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
மருமக்கள், பூட்டப்பிள்ளைகள்

(18868)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.03.1954

மறைவு 29.01.2019

அமரர் **கந்தசாமி ஸ்ரீகாந்தன்**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்
ஆண்டுகள் ஐந்தென்ன
ஐந்நூறு கடந்தாலும்
உங்கள் அன்பு முகம்
எங்கள் மனங்களில் நீங்காது

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

அம்பிகைவேதுப்பகம்,
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

(C-8265)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலங்கையின் சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாள்'

# போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு அழைப்பு



(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில், தியாகச் சாவைத் தழுவிக்கொண்ட திருமலை நடராஜன் 1957.02.04 ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து, திருமலையில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக்கொடியை அகற்றி கறுப்புக்கொடியை ஏற்றியமைக்காக சிங்களப் பொலிஸாரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டு 67 வருடங்கள் கடந்தும் இந்த நாட்டில் தமிழர்களின் இறைமை இன்றளவும் அங்கீகரிக்கப்படவில்லை.

தமது பூர்வீக மண்ணில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு வரும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை நிலைநிறுத்த, அரசுக்கும் அரச கட்டமைப்புகளுக்கும் எதிராக எல்லா வழிகளிலும் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள எமது மக்களது அக உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் எமது மக்களின் குரலாகவுமே யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படாதவரை, ஈழத் தமிழர்களை இறைமையுள்ள தேசிய இனமாக இலங்கைத் தேசம் அங்கீகரிக்காதவரை, இந்த நாட்டின் சுதந்திர தினம் தமிழ் மக்களின் கரிநாளே என்பதை மீள வலியுறுத்தும் இந்தப் போராட்டத்தில், அரசியற் கட்சி மற்றும் கொள்கை வேறுபாடுகள் எவையுமற்று எமது இனத்தின் உரிமைக்கான ஏகோபித்த குரலாக எல்லோரும் இணைந்து, இதனை ஒரு மக்கள் திரட்சி மிக்க போராட்ட வடிவமாக எழுச்சிபெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டு நிற்கிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## புதிய மின் இணைப்பு பெறுபவர்கள் தவணை முறையில் பணம் செலுத்தலாம்

## அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் புதிதாக மின் இணைப்புகளுக்கு ஒரே நேரத்தில் பணம் செலுத்த முடியாத விண்ணப்பதாரர்களுக்கு தவணை முறையில் செலுத்தும் வசதியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மின்சார சபைக்கு, அமைச்சர் காஞ்சன விஜேசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.

மின்சார சபையின் ஏனைய சேவைகளுக்கு தவணை முறையில் பணம் செலுத்தும் வசதியை ஏற்படுத்தி தருமாறும் அதற்கான வசதிகளை உடனடியாக அறிவிக்குமாறும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய, மின்சார சபை விரைவில் வசதிகளை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-5-6)

## லிற்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

லிற்ரோ எரிவாயு விலையில் இம்மாதம் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லிற்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட லிற்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இதனை குறிப்பிட்டார். (நி-5-6)

## கொடுப்பனவு தொடர்பில் முடிவில்லை; விடைத்தாள் மதிப்பீடு தடைப்படலாம்

## ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கட்டணம் தொடர்பில் கல்வி அதிகாரிகள் நம்பகமான தீர்மானத்தை வழங்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இல்லை என்றால் விடைத்தாள் மதிப்பீடு நடவடிக்கைகள் தடைப்படலாம் என அதன் செயலாளர் ஜோசப் ஸ்டார் லின் தெரிவித்துள்ளார்.

கடந்த முறை விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பில் குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்படாத காரணத்தினால் சில ஆசிரியர்கள் மதிப்பீட்டுப் பணியிலிருந்து விலகியதாக அவர் தெரிவித்தார்.

கடந்த முறை வழங்கப்பட்ட நாளாந்த கொடுப்பனவான 2000 ரூபாவை இம்முறையும் வழங்க அமைச்சரவைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக பிரதி பரீட்சை ஆணையாளர் லசிக சமரகோன் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தினால் "சவால் மிகு நேரங்களில் சமயங்களின் வகிபாகம்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட கிறீஸ்தவ கற்கைகளிலான இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பிராந்திய...

பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தில் சாதாரண மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டினை பெறுவதற்காக நேற்று முன்தினம் இரவு முதல் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் காரியாலயம் முன்பாக வரிசையில் காத்திருந்ததுடன் வரிசையில் காத்திருந்தவர்களுக்கான வரிசை இலக்கம் பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று 85ம் இலக்கம் பெற்ற நபர் வாயிலின் வெளியே வரிசையில் நிற்கத்தக்கதாக இனி எவருக்கும் கடவுச்சீட்டு வழங்க முடியாது எனவும் 160பேரை தாம் ஒருநாள் சேவையின் கீழ் உள்வாங்கியுள்ளதுடன் 50பேரை சாதாரண சேவையின் கீழ் உள்வாங்கி இருப்பதனால் ஏனையவர்களை பிறிதொரு தினத்தில் வருமாறும் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த பொதுமக்கள் 85ம் இலக்கம் பெற்ற நபர் வெளியே நிற்க எவ்வாறு 160ம்இலக்கம் பெற்ற நபர் உள்ளே செல்ல முடியும் என்று கேள்வி எழுப்பியதுடன் அங்கு மாபிய கும்பல் ஒன்று கடவுச்சிட்டு பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசைகளுக்கு இடையே அவர்களை உள்நுழைக்கின்றனர் என தெரிவித்து, பிரதான வாயிலினை வழி மறித்து பொதுமக்கள் தமது எதிர்ப்பினையும் வெளிப்படுத்திருந்தனர்.

இதேவேளை, கடவுச்சீட்டு பெற வந்த நபர் ஒருவர் திடீரென மரத்தில் ஏறி தற்கொலைக்கு முயன்றதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

திருகோணமலை மஹாயபுர பகுதியை சேர்ந்த 51வயதுடைய அநுரகுமார என்ற நபர் தான் கடந்த மூன்று தினங்களாக கடவுச்சீட்டுப் பெறுவதற்காக வந்து சென்றதாகவும் எனினும் தனக்குக் கடவுச்சீட்டை பெறமுடியாமல் போனதால் மரத்தில் ஏறி தற்கொலை செய்வேன் என கூறி போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்துச் சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய சமூக சேவைப் பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.கே.கே.பிரியரத்தன, தலைமையிலான பொலிஸ் குழுவினர் திணைக்கள ஆணையாளருடன் கலந்துரையாடினர்.

இன்று(நேற்று) மேலதிக நபர்களை உள்ளெடுக்க முடியாது எனவும், பிறிதொரு தினத்தில் கடவுச்சீட்டினை பெறுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கான இலக்கம் வழங்குவதாக ஆணையாளர் உறுதிமொழி அளித்துள்ளதாகவும் கடவுச்சிட்டினை பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசையில் ஈடுபடுத்துபவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்வதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மக்களிடம் தெரிவித்ததையடுத்து சுமுகமான நிலைமைக்கு பொதுமக்கள் வந்திருந்தனர். தொடர்ந்து குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளினால் பிறிதொரு தினத்தில் முன்னுரிமை அடிப்படையில் கடவுச்சீட்டை பெறுவதற்கான இலக்கமும் இதன் போது வழங்கப்பட்டது. (ந-7,250)

## மக்களாதரவு...

போதிலும் சிலரது கோமாளித்தனமான செயற்பாடுகளினாலேயே ஜனாதிபதி பதவியிலிருந்து விலக நேரிட்டதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆண்டு. அதனால் புதிய கூட்டணிகள் தொடர்பான அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

அந்தக் கூட்டணிகள் தொடர்பில் சிலர் என்னுடனும் பேசியுள்ளனர். எனினும், எந்தக் கூட்டணியுடனும் இணைவது தொடர்பில் நான் முடிவு எடுக்கவில்லை. நாட்டின் சமகால அரசியல் நிலைவரத்தை நான் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். பலத்த சவாலுக்கு மத்தியில் நாட்டின் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அயராது பாடுபடுகின்றார். இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றே தீரவேண்டும். அதை ஒத்திவைக்கும் எண்ணம் எவருக்கும் இருக்கக்கூடாது.

ஓய்வு நிலையில் இருக்கும் நான் மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றார். (ந-7)


**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

**பதவி வெற்றிடம்**

**சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையம் - (பெண்கள்)**

**முகாமையாளர்(பெண்)**

**சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியிருந்து நிர்வகிக்க :**

- க.பொ.த உயர்தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமையுடைய வரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
- வயதெல்லை 40 - 55 வரை.

**Counselling / Child Care Certificate மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் 10.02.2024 க்கு முன்னர் **சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி** எனும் முகவரிக்கு அல்லது 076 300 4877 எனும் இலக்கத்திற்கோ அனுப்பி வைக்கவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(C-8270)

லோ.துஷிகரன்
செயலாளர்


## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 03 - 1926



மறைவு 01 - 02 - 2024

### திருமதி சரஸ்வதி சீனிவாசகம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சீனிவாசகம் அவர்கள் கடந்த 01.02.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் நமசிவாயகம் - இளையபிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை(ASOKA PHOTO), தியாகராசா (RETIRED SURVEYOR DRAUGHTSMAN), அமிர்தயோகம் மற்றும் சிவசவுந்தரி, தம்பிராசா(UK) ஆகியோரின் பிரியமுள்ள சகோதரியும் சரோஜினி, ஜெகதீசன்(UK), ஜெகநாதன்(FRANCE), ரஞ்சினி ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் கணேசவேல்(J.P), கணேஸ்வரி(UK), சிவகாந்தி (FRANCE), காலஞ்சென்ற சுந்தரலிங்கம்(VESTA INDUSTRIES) ஆகியோரின் அன்பு மாமியாரும் உருத்திரகணேசன், ஜெயகணேசன் (மக்கள் வங்கி), காலஞ்சென்ற தேவகணேசன் மற்றும் ஜெயவாணி(UK), வாகினி(UK), ஜெயரதன்(UK), ஜெயந்தன்(FRANCE), ஜெயானந்தன்(FRANCE), மதுரன்(FRANCE), சுதர்ஷன், வாகீசன், சிவதர்ஷன்(FINLAND) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.
021 221 3043

(18871)

தகவல்:
குடும்பத்தினர்

## 3ஆம் ஆண்டு நினைவலைகளுடன்...

மலர்வு 25 06 1955



உதிர்வு 06 02 2021

அமரர்

### சண்முகம் பாலசுந்தரம்

திதி : நவமி 03.02.2024

அன்பின் திருவுருவே எங்கள் அப்பாவே!
அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்தீர்களே!
எட்டமுடியாத தொலைதூரம் சென்று
மூன்று ஆண்டுகள் ஆனாலும்
கலையாத உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
வேண்டுகின்றோம் என்றும் பிள்ளைகள் நாம்.

அம்பன்,
குடத்தனை.

(C-8272)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்திலிருந்து மீண்டுள்ளது இலங்கை

## சுதந்திரதினத்தை முன்னிட்டு அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பாதை உலகத்திற்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதால் இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும் மீண்டும் சுபீட்சத்தைக் கொண்டுவரவும் இந்த சுதந்திர தினத்தில் உறுதி கொள்வோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது, வங்குரோத்தடைந்த நாடு என்று முத்திரை குத்தப்பட்டிருந்தோம். ஆனால் 76 ஆவது சுதந்திர தினத்தில் பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அந்த நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் துன்பங்களைச் சகித்துக்கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நீண்ட கால வேலைத்திட்டத்திற்கு ஆதரவளித்ததால் எம்மால் மெதுவாக முன்னேற முடிந்தது.

இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லும் போது சிரமங்கள் யாவும் மறைந்துவிடும், வாழ்க்கைச் சுமை குறையும், பொருளாதாரம் வலுவடையும், இலங்கை தாய்க்கு மீண்டும் விடிவு கிட்டும்.

மேலும் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பெருமைமிக்க பணிக்கு இலங்கையிலும் நாட்டுக்கு வெளியிலும் வாழும் அனைத்து இலங்கையர்களும் தங்களால் முடிந்தளவு பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# இணைய பாதுகாப்பு சட்டம்; வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவினால், நேற்று முன்தினம் சான்றுரைப்படுத்தப்பட்ட இணையப்பாதுகாப்புச் சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதேநேரம், அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் எதிர்ப்பு சட்டமூலத்தின் சில பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானது என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணை நிறைவடைந்துள்ளன.

அதன்படி, தனது இரகசிய முடிவை சபாநாயகருக்கு அனுப்புவதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை சவாலுக்கு உட்படுத்தி 31 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதுடன், அவை தொடர்ச்சியாக 6 நாட்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில், குறித்த மனுக்கள் மீதான விசாரணை முடிவடைந்த நிலையில், அதன் முடிவை சபாநாயகருக்கு அனுப்புவதாக உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 15 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் 15 கிலோ கஞ்சா போதைப்பொருளுடன் நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பகுதியை சேர்ந்த 46 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்து, அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# 17 மாதங்களில் 119 பிரசவகால உயிரிழப்புகள்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

கடந்த 2022 ஜனவரி மாதம் முதல் 2023 மே மாதம் வரையிலான 17 மாதங்களில் 119 பிரசவ கால உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையில் இந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெறும் பிரசவகால உயிரிழப்பு வீதத்தை குறைப்பதற்காக நாடெங்கும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் பிரசவ கால மற்றும் பிரசவத்துக்குப் பின்னரான மரணங்கள் தொடர்பில் கண்காணிக்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 5 ஆம் திகதி திங்கட்கிழமை பொது விடுமுறை வழங்கப்படாது

## பொது நிர்வாக அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் நாளை ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படவுள்ள நிலையில் அடுத்த நாளான திங்கட்கிழமை பொது விடு முறை வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்பட்டாலும் அதற்கு மறுநாள் பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்படாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன நேற்று தெரிவித்தார்.

அதன்படி, திங்கட்கிழமை அனைத்து அரச நிறுவனங்களும் வழமை போன்று இயங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# இராசிபலன்

03.02.2024
தை 20,சனிக்கிழமை
அட்டமி பிற்பகல் 1.21 மணிவரை

விசாகம் பின்னிரவு 3.36 மணி வரை
சுபநேரம் -3.35-5.05 மணிவரை
இராகுகாலம்-9.35-11.05மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி

வளவன்

**மேஷம்**: சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவார்கள், போசன சுகமுண்டு.

**கடகம்**: மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்**: காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பயணங்களால் பலனுண்டு, பணப்பிரச்சினைகள் தீரும்.

**மகரம்**: மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**: நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**சிம்மம்**: நண்பர்கள் சொல்லும் யோசனை உங்களுக்கு நல்லதாக அமையும், ஆதாயம் அதிகரிக்கும் நாள், கல்வித் தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்**: வீட்டு பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், வீண்பழிகள் அகலும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்**: முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி**: வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வீண் விவாதங்களைத்தவிர்ப்பது நல்லது, இன்பங்கள் இல்லம் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


**தனுசு**: பிரச்சினையிலிருந்து விடுபடுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்**: பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீதி சீரின்மையால் நோயாளர்கள் அவதி

## பரு. – மருதங்கேணி வீதியை சீரமைக்குமாறு கோரிக்கை



(கரணவாய்)

பருத்தித்துறை- மருதங்கேணி பிரதான வீதியின் பல பகுதிகள் சேதமுற்று காணப்படுவதால் அவ்வீதியால் பயணிப்போர் மற்றும் மருத்துவமனைக்கு செல்லும் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக மருதங்கேணி மருத்துவ மனையிலிருந்து பருத்தித்துறை ஆதார மருத்துவ மனைக்கு அவசிய தேவைப் பாடுடைய நோயாளர்களை விரைவாக நோயாளர் காவு வண்டியில் செல்ல முடியாத நிலைமை காணப்படு வதோடு, மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் மக்கள் இன்னல் படுகின்ற நிலைமை காணப்படுவதாக மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி குறித்த வீதியினை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். (நி-5-6-60)

# ஒளிராத நிலையில் மின் விளக்குகள்

## மக்கள் அசௌகரியம்


(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பகுதிக்கு உட்பட்ட பிரதான உள்ளக வீதியோரங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் இரவு வேளைகளில் பயணிப்போர் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

மின்விளக்குகள் பழுதடைந்து ஒளிராமல் உள்ளதால் இதனை சாதகமாக பயன்படுத்தி வன்முறைச் செயல்கள், திருடர்களின் கைவரிசை மற்றும் விபத்துக்கள் ஏற்படும் நிலமை காணப்படுகிறது.

இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து பழுதடைந்த மின் விளக்குகளை சீர்செய்ய வேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6-33)

# தென்மராட்சி பிரதேச குழுக்கூட்டம்



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக் கிழமை காலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செய லர் திருமதி.உஷா சுபலிங்கத் தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிகழ் ச்சித் திட்டத்தின் கீழ் கிராம மட்டங்களில் இனங்காணப்பட்ட திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தென் மராட்சியில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 218 அபிவிருத்தித் திட்ட ங்கள் முன் மொழிய ப்பட்டதுடன் அத ற்கான ஒதுக்கீடாக 149 மில்லியன் ரூபாய் தேவை எனவும் இனங்காட்டப்பட்டுள்ளது.

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் மேற்படி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவ ட்டத்திற்கு 322 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தில் கிராமிய வீதி புனரமைப்பு.விளையாட்டு மைதானங்கள் புனரமைப்பு, குரங்குக் கட்டுப்பாடு.வாய்க்கால் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களை தென் மராட்சி மக்கள் முன்னிலைப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

# 2 கிலோ கஞ்சாவுடன் சந்தேக நபர் கைது



(சாவகச்சேரி)

பூநகரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பள்ளிக்குடா பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 2கிலோ 100 கிராம் கஞ்சாவுடன் 40 வயது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்வதற்கு முற்பட்ட வேளையில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-30)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான NVQ சான்றிதழ் முழுநேர கற்கைநெறிகளை எதிர்வரும் 09.02.2024 ஆம் திகதி அனைத்து பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணனி படவடிவமைப்பாளர், முன்பள்ளி ஆசிரியர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், மின்னிணைப்பாளர்,பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைவடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணினி வன்பொருள் திருத்துநர். கணினி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், உதவி கணிய அளவியளாளர் மற்றும் விரைவு உணவு சேவையாளர் போன்ற கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும்.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 09.02.2024 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம். இல 12/4 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது எமது பிரதேச தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 071 0318 737 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டிற்கான NVQ சான்றிதழ் தர (மட்டம் 3,4) மற்றும் NVQ டிப்ளோமா தர (மட்டம் 5,6) கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலவசமான முழு நேர கற்கை நெறிகள் மற்றும் பகுதி நேர கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக மாணவர்களை அனுமதிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் க.பொ.த (உ.த) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளது. பயில விரும்பும் தகுதியுடையோர் தொழில் நுட்பக்கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ 021 222 0028, 021 222 2358 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவோ தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 400 | 530 |
| உருளைக்கிழங்கு | 200 | 140 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 1000 | 1200 | 1000 |
| தக்காளி | 800 | 600 | 700 | 800 | 750 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 150 | 130 |
| கோவா | 700 | 500 | 700 | 600 | 750 |
| கரட் | 1600 | 800 | 1400 | 1100 | 1400 |
| பூசணி | 180 | 200 | 180 | 250 | 200 |
| புடோல் | 300 | 300 | 300 | 400 | 220 |
| வாழைக்காய் | 350 | 250 | 200 | 300 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 380 | 300 | 400 | 320 |
| பாகற்காய் | 650 | 600 | 600 | 700 | 560 |
| வெண்டக்காய் | 600 | 600 | 200 | 600 | 405 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 140 |
| பயற்றங்காய் | 600 | 500 | 500 | 600 | 600 |
| லீக்ஸ் | 460 | 450 | 600 | 600 | 600 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 600 | 650 |
| கறிமிளகாய் | 800 | 700 | 800 | 1200 | 950 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | 2800 | 1750 |
| போஞ்சி | 550 | 500 | 600 | 800 | 550 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 500 | 350 | -- |
| கீரை – 1 பிடி | 60 | 80 | 100 | 100 | 60 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-120 | 50-80 |
| இராசவள்ளி | 450 | 500 | 400 | 600 | 500 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 300 | 500 | 260 |
| முள்ளங்கி | 120 | 200 | 250 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 | 130 |
| வல்லாரை | 80 | 200 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 160 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சை

# பாடசாலை ரீதியிலான வெட்டுப்புள்ளிகள் வெளியானது

(கொழும்பு)

கல்வியாண்டு 2023 இற்கான 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், இந்த ஆண்டுக்கான 6 ஆம் தரத்தில் மாணவர்களை பாட சாலைகளுக்கு சேர்த்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வெட்டுப் புள்ளிகள் தொடர்பான தகவல்களை கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் (www.moe.gov.lk) பெற்றுக் கொள்ள முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# தேர்தலில் பொதுஜன பெரமுன பெருவெற்றி பெறும் - நாமல்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை பொதுஜன பெரமுன மிகுந்த பலத்துடன் எதிர்கொள்ளுமெனவும் தேர்தலில் கட்சி பெரு வெற்றி பெறும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் வெற்றியை நோக்கி கட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ள நிலையில், கட்சியின் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எதிர்வரும் பொதுத்தேர்தலை பொதுஜன பெரமுன மிகுந்த



பலத்துடன் எதிர்கொள்ளும். சந்தர்ப்பவாதத்துடன் செயற்பட்டு கட்சியின் கொள்கையை மாற்றப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)



## ஐக்கிய அமெரிக்கா முகவர் நிறுவன அதிகாரி

# பாராளுமன்றத்துக்கு விஜயம்

(கொழும்பு)

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் நிர்வாகத்திற்கான பணியகத்தின் நிர்வாக உத வியாளர் ஷனன் கிரீன் தலைமையிலான தூதுக்குழுவினர் இலங்கை பாராளுமன்றத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

இந்தத் தூதுக்குழுவினர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பணியாட் தொகுதியின் பிரதானியும் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன மற்றும் பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். (நி-5-6)

# சுதந்திர தினத்தன்று கைதிகளை திறந்த வெளியில் பார்வையிடலாம்

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

76 ஆவது சுதந்திர தினத்தன்று கைதிகளை சிறைச்சாலை திறந்தவெளியில் பார்வையிடும் திட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை அமுல்படுத்தப்படும் என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அன்றைய தினம் சிறைச்சாலை விதிமுறைகள் மற் றும் சுகாதார பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சிறைச்சா லைகளிலும் இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

ஒரு கைதியை உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என மூவர் பார்வையிடும் சந் தர்ப்பம் வழங்கப்படும் என வும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கைதியின் உறவினர்கள் கொண்டு வரும் உணவு மற்றும் உடைகளின் பொதி ஒருவருக்கு ஏற்ற அளவில் மட்டுமே கைதிக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், தடை செய்யப்பட்ட பொருட்களை சிறைச்சாலை வளாகத்துக்குள் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளதா கவும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# பொருளாதார சுதந்திரம் இலங்கைக்கு கிடைக்கவில்லை

## பேராசிரியர் திஸ்ஸ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டுக்கு இன்னமும் பொருளாதார சுதந்திரம் கிடைக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

1948 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அரசியல் ரீதியான சுதந்திரம் கிடைக்கப் பெற்ற போதிலும் பொருளாதார சுதந்திரம் கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் அணிசேரா கொள்கைகளிலிருந்து விடுபட்டு அமெரிக்க அடிமைத்துவ கொள்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளார்.

எமது காணிகள் மற்றும் வளங்களை வெளிநாடுகள் சுரண்டுவதனை தடுத்து உள்நாட்டு தேசிய பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப முடியும்.

தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதினை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (நி-5-6)


## சூரிய மின்படலம் பொருத்துவதற்கான கூறுவிலை கோரல்

எமது சங்க தலைமை காரியாலய கட்டிடத்தில் 40 KW சூரிய மின்படல தொகுதி அமைக்கப்படவிருப்பதால் இதற்கான சகல உபகரணங்களுக்கும் இவற்றை இயங்கு நிலையில் பொருத்தி உத்தரவாதத்துடன் வழங்குவதற்கும் பொருத்தமானவர்களிடமிருந்து கூறுவிலைகள் வரவேற்கப்படுகிறது. இடத்தினை நேரடியாக பார்வையிட்டு விபரங்களை பெற்று கூறுவிலைகளை **"சூரிய மின்படல கூறுவிலை"** என தலைப்பிட்டு எமது முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 09.02.2024ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர், கட்டைவேலி**
**நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,**
**நெல்லியடி, கரவெட்டி.**
**021 226 3263**

(C-8264)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சுப்பிரமணியம் கோகுலன்



திருமதி.நிஷாந்தி கயூரன்



செல்வி.கிறிஸ்ரின் வேர்ஜினி கிறிஸ்தோப்பர்

எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.சுப்பிரமணியம் கோகுலன் திருமதி.நிஷாந்தி கயூரன், செல்வி.கிறிஸ்ரின் வேர்ஜினி கிறிஸ்தோப்பர், ஆகியோர் கடந்த 31.01.2024 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி இளமாணிப் (B.Ed) பட்டத்தினைப் பெற்றுக் கொண்டமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெறவும் வாழ்த்துகின்றோம்.

(சி-8266)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்



# 'தமிழக வெற்ற
# புதிய கட்சியை ஆரம்ப
## தமிழக அரசியலி

**(சென்னை)**

**தமிழக வெற்றி கழகம் என்ற கட்சி பதிவு செய்ய நடிகர் விஜய் அதிகார பூர்வமாக எக்ஸ் தளத்தில் அடுத்து தமிழக அரசியலில் இந்த விடயம் ஏற்படுத்தியுள்ளது.**

டில்லியில் உள்ள இந்திய தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு நடிகர் விஜயின் மக்கள் இயக்க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் சென்ற நிலையில், தமிழக வெற்றி கழகம் என்று கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக நடிகர் விஜய் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே மக்களைவைத் தேர்தலுக்கு தயாராகும் வகையில், நடிகர் விஜய் கட்சி ஆரம்பிக்க உள்ளதாக கூறப்பட்டு வந்த நிலையில்,

# பேருந்து, லொறி மோதி 19 பேர் உயிரிழப்பு
## மெக்சிக்கோவில் துயரம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவின் வட மேற்கே சென்று கொண்டிருந்த இரட்டை அடுக்கு பேருந்து மற்றும் லொறி மோதி கொண்டதில், 19 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

மேலும் குறித்த விபத்து சம்பவத்தில் 22 பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருதாவது,

குறித்த பேருந்து ஜலிஸ்கோ மாகாணத்தின் குவாதலஜாரா நகரில் இருந்து சினலோவா மாகாணத்தின் லாஸ் மொகிஸ் நகரை நோக்கி 50 பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது.

அப்போது, பேருந்து மற்றும் லொறி மோதி கொண்டதில், பேருந்து தீப்பிடித்து கொண்டது. இதில், உயிரிழந்த 19 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. (நி-5-6)



# அயோத்தி இராமரை தரிசிக்க படையெடுக்கும் தென்கொரிய மக்கள்

(டில்லி)

இந்தியாவில் அயோத்தியில் உள்ள ராமரை தரிசிக்க தென்கொரிய மக்கள் படையெடுத்துச் செல்கின்றனர்.

அயோத்தியை, தங்களுடைய தாய்வழி ஊராக தென்கொரிய மக்கள் பார்ப்பதே அவர்கள் பெருமளவில் வருவதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

தென்கொரியாவில் உள்ள சில வரலாற்று ஆவணங்கள் மற்றும் தகவல்களின்படி, 2,000 ஆண்டுகளுக்கு முன், அயோத்தியைச் சேர்ந்த, 16 வயது இளவரசி சுரிரத்னா, படகு வாயிலாக கடலில் பயணம் மேற்கொண்டு, 4,500 கி.மீ, தொலைவில் உள்ள கொரியாவுக்கு சென்று அங்கு, கொரிய அரசர் கிம் சுரோவை திருமணம் செய்தார்.

ராணியான சுரிரத்னாவுக்கு, ராணி ஹியோ ஹேவான்காக் என்று பெயரிடப்பட்டது. இவர், 157 ஆண்டுகள் உயிர் வாழ்ந்ததாகவும் 12 குழந்தைகளை பெற்றெடுத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், கரக் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களில், 60 லட்சம் பேர், தற்போது தென்கொரியாவில் உள்ளனர். அங்கு, ராணி ஹேவான்காக்குக்கு நினைவிடம் மற்றும் கோவில் உள்ளது. இதைத் தவிர, அயோத்தியில், சரயு நதிக்கரையில், சுரிரத்னாவின் நினைவாக பிரம்மாண்ட பூங்கா உள்ளது.



கடந்த, 2015 இல் பிரதமர் நரேந்திர மோடி, தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி மூன் ஜேயின் இடையே ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன்படி, அயோத்தியில் உள்ள சுரிரத்னாவின் நினைவிடத்தை அழகுபடுத்தும் நடவடிக்கைகள் தொடங்கின.

கடந்த, 2018 இல் இதை, தென்கொரிய ஜனாதிபதியின் மனைவி கிம் ஜங்க் சோக், திறந்து வைத்தார். ராணி ஹேவான்காக் நினைவாக, மத்திய அரசு சார்பில், 2019 இல் தபால் தலையும் வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, கரக் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஒவ்வொரு ஆண்டும் அயோத்திக்கு வருவதை வழக்கமாக வைத்துள்ளனர். தங்களுடைய தாய் வழி ஊரான அயோத்தியில், ராமருக்கு கோவில் கட்டப்பட்டு, அதன் கும்பாபிஷேக விழா நடந்ததை, நேரலையில் பார்த்து மகிழ்ந்தனர். இதைத் தொடர்ந்து, ராமர் கோவிலை நேரில் பார்ப்பதற்காக, குழுக்களாக வரத் தொடங்கி உள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...றி கழகம்'
# ...ம்பித்தார் விஜய்
## ...லில் பரபரப்பு

**...சய்யப்பட்டுள்ளதாக ...ில்பதிவிட்டுள்ளதை ...ம் புதிய பரபரப்பை**

...வைத் ...கும் ...விஜய் ...தாக ...யில்,

நேற்று டில்லியில் உள்ள இந்திய தலைமைத்தேர்தல் ஆணையத்துக்கு விஜய் மக்கள் இயக்க பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் சென்றதாக தகவல் வெளியானது.


நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதையும் புதிய கட்சி தொடங்குவதையும் இதுவரை வெளிப்படையாக எங்கும் அறிவிக்கவில்லை.

இந் நிலையிலேயே முதல் முறையாக, தமிழக வெற்றி கழகம் என்று கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக நடிகர் விஜய் அதிகார பூர்வமாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (நி-5-6)

# மலேசியாவின் புதிய மன்னராக சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர்

(கோலாலம்பூர்)

மலேசியாவின் முன்னாள் மன்னரான பகாங் ஆட்சியாளர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹ்மத் ஷாவின் பதவிக்காலம் நிறைவு பெற்ற நிலையில் நாட்டின் 17 ஆவது மன்னராக ஜோகூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர் பொறுப்பேற்றுக் கொண்டார்.



கோலாலம்பூரில் உள்ள தேசிய அரண்மனையில் அவரது பதவியேற்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

புதிய மன்னரான இப்ராஹிம் இஸ்கந்தருக்கு மலேசியாவை தவிர பிற இடங்களிலும் சொத்துக்கள் அதிகமாக உள்ளன. இவரிடம் 300 கார்கள் மற்றும் ஜெட் விமானங்கள் உள்ளன.

இதில் ஒரு கார் ஜேர்மனி சர்வாதிகாரியான ஹிட்லர் பரிசளித்தது.

இவரது குடும்பமும் சிங்கப்பூரில் நிலம் மற்றும் பாமாயில், ரியல் எஸ்டேட் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் முதலீடுகளை கொண்டிருக்கிறது. இதன் மதிப்பு ரூ.47 ஆயிரம் கோடி ஆகும்.

மன்னர் இப்ராஹிம் இஸ்கந்தர் கூறும்போது, நான் அரசாங்கத்தை ஆதரிப்பேன். ஆனால் அவர்கள் தவறாக ஏதாவது செய்கிறார்கள் என்று நினைத்தால் அது குறித்து எச்சரிப்பேன் எனவும் தெரிவித்தார். (நி-5-6)

# உக்ரைனின் திடீர் தாக்குதலால் ரஷ்யாவின் ஏவுகணைக் கப்பல் அழிப்பு

(மொஸ்கோ)

உக்ரைனின் தாக்குதலில் ரஷ்யாவின் ஏவுகணை கப்பலொன்று கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான யுத்தம் இரண்டு ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள நிலையில், யுத்தம் முடிவே இல்லாமல் தொடர்ந்த வண்ணம் காணப்படுகின்றது.

உக்ரைன் திடீர் தாக்குதல் நடத்தி ரஷ்யாவின் இவானோவெட்ஸ் என்ற ஏவுகணை கப்பலொன்றை முற்றாக அழித்துள்ளது.


அத்துடன், உக்ரைனின் அதிரடி தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட இவானோவெட்ஸ் கப்பல், ஜனவரி 31 ஆம் திகதிக்கும் பெப்ரவரி 1 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட இரவில் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவின் கடல் பகுதியில் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதலினால், ரஷ்யாவிற்கு 60 முதல் 70 மில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும்,இவானோ வெட்ஸ் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட பிறகு ரஷ்யா தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொண்ட போதும் அது வெற்றியடையவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# இம்ரான்கானின் ஆதரவு வேட்பாளர் சுட்டுக்கொலை

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மர்ம நபர்களால் இவர் கடந்த புதன்கிழமை சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் எதிர் வரும் 8ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இவருக்கு முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் கட்சி ஆதரவு வழங்கப்பட்டு இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான் எல்லை, பகுதியில் உள்ள பஜார் என்ற பழங்குடியின மாவட்டத்தில் சுயேட்சை வேட்பாளரான ரெஹான் ஜெப்கான் என்பவரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

மேலும் அவருடன் இருந்த 4 உதவியாளர்களும் சுடப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த நிலையில், ஜெப் கான் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவருடைய உதவியாளர்கள் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஊழல் வழக்கு ஒன்றில் இம்ரான் கான் மற்றும் அவருடைய மனைவி பூஷ்ரா ஆகியோருக்கு, 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# எரிவாயு வெடித்ததில் இருவர் பலி, 222 பேர் படுகாயம்
## கென்யாவில் அவலம்

(நைரோப்)

கென்யாவின் தலைநகர் நைரோபியில் ஏரிவாயு வெடித்ததில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதோடு 222 பேர் படுகாயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நைரோபியின் எம்பகாசி மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழன் இரவு 11.30 மணியளவில் எரிவாயு ஏற்றிச் சென்ற ட்ரக் வாகனம் வெடித்ததில் தீ பரவியுள்ளது.

தீப்பரவலினால் குடியிருப்பு கட்டடங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் வாகனங்கள் என்பன தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், நைரோபி வெஸ்ட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சர்-தொழிற்சங்கங்கள் இடையிலான பேச்சுவார்த்தை தோல்வி

(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார தொழிற்சங்கங்களுக்கும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் தீர்வு ஏதுமின்றி நிறைவடைந்துள்ளது.

இதன்படி, 72 சுகாதார தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்தும் நீடிப்பதாக சுகாதார தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இந்த வேலை நிறுத்தம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் செயற்பாடு காரணமாக பல வைத்திய சாலைகளின் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால் நோயாளிகள் கடும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.


வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி கடந்த 16ஆம் திகதி சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என உறுதியளித்ததன் பேரில் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்திருந்தனர்.

எவ்வாறாயினும் இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காத காரணத்தினால் 72 சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் காலை முதல் மீண்டும் ஒன்றிணைந்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இந்த வேலை நிறுத்தத்தில் ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் தலைமையிலான அரச தாதியர் சங்கமும் கலந்து கொண்டதுடன் ஏனைய தாதியர் சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிக்க வில்லை.

எவ்வாறாயினும் இந்த சூழ்நிலையில் மருத்துவமனைகளை நடத்துவதற்கு முப்படையினரும் வரவழைக்கப்பட்டனர், மேலும் கொழும்பு மற்றும் கண்டி தேசிய மருத்துவமனைகள் உட்பட 52 மருத்துவமனைகளில் சேவைகளைப் பராமரிக்க முப்படையைச் சேர்ந்த 1022 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பாணின் எடை குறித்து விசேட வர்த்தமானி வெளியீடு



(கொழும்பு)

பாணின் நிர்ணயிக்கப்பட்ட எடையைக் குறிப்பிடும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஒரு இறாத்தல் பாணின் பரிந்துரைக்கப்பட்ட எடை 450 கிராமாக இருக்க வேண்டும் என்றும் அதன் மாறுபாடு 13.5 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

அத்துடன் அரை இறாத்தல் பாணியின் பரிந்துரைக்கப்பட்ட எடை 225 கிராமாக இருக்க வேண்டும் எனவும் அதன் மாறுபாடு 9 கிராமுக்கு குறையாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, விற்பனைக்கு காட்சிப்படுத்தப்படும் பாணின் எடை தெளிவாக காணக்கூடிய வகையில் இருக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

## யுக்திய சுற்றிவளைப்பில் 703 பேர் கைது

(கொழும்பு)

ஒரு நாளில் நடத்தப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மேலும் 703 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 525 சந்தேகநபர்களும் உள்ளடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் குற்றத்தடுப்பு பிரிவினரால் பட்டியலிடப்பட்டுள்ளவர்களில் 178 சந்தேகநபர்களும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

சந்தேகநபர்களிடமிருந்து 204 கிராம் ஹெரோயின், 118 கிராம் ஐஸ் போதைப்பொருள், 3 கிலோ 100 கிராம் கஞ்சா உள்ளிட்டவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 525 சந்தேகநபர்களில் 6 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனிடையே, போதைப் பொருளுக்கு அடிமையான 4 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (நி-5-6)

# உலக வங்கியிடமிருந்து 150 மில்லியன் டொலர் கடனுதவி




(கொழும்பு)

நிதித்துறை பாதுகாப்பு வலையை வலுப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியளிப்பதற்காக உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடம் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தில் கவனம் செலுத்தி, இலங்கையின் நிதித் துறையின் பாதுகாப்பு வலையின் நிதி மற்றும் நிறுவனத் திறனை வலுப்படுத்த இந்தத் தொகை வழங்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் நிதித்துறைக்கு ஆதரவளிப்பதற்கு வலுவான பாதுகாப்பு வலைகள் தேவைப்படுவதாகவும், பொருளாதாரத்திற்கு நிலையான மற்றும் நம்பகமான வங்கித்துறை வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 25



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இசையும் செடியும்

புல்லாங்குழல் சங்கீதத்தை கேட்டுவிட்டு செடி ,கொடி ஆடு,மாடு எல்லாம் மயங்கிப்போச்சு என்று புராணக் கதைகளில் எல்லாம் கேள்விப்பட்டு இருக்கோம். இப்பவும் நிஜமாகவே அப்படியெல்லாம் நடக்கும் போல இருக்கு சார்!

செடி,கொடி எல்லாமே சங்கீதத்தை ரசிக்குதாமே!

செடி,கொடிகள் போல இசையோட பரிணாமம் எப்படிப் பட்டது?அப்படி என்கிற ஆராய்ச்சி எங்கே நடந்தது தெரியுமா? இந்தியாவில் தான்! அதுவும் தமிழ் நாட்டில நடந்தஆராய்ச்சி இது.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே 1962 ஆம் ஆண்டு இந்த ஆராய்ச்சி நடந்தது. அங்கேயிருந்த டாக்டர் டி.சி.சிங்கான் இந்த ஆராய்ச்சியை செய்தார்.

கடைசியில் தாவர இனங்கள் இசையை ரசிக்குது என்று கண்டுபிடித்து விட்டார்.ரசிக்குது என்றால்என்ன அர்த்தம்? இது நல்ல சங்கீதம், இது மோசமான சங்கீதம், அப்படி என்கிற வித்தியாசம் அதுக்கெல்லாம் தெரியுது என்று அர்த்தம்.

இனிமையான சங்கீதமா இருந்தா செடி ,கொடிகள் மயங்குது!மோசமான-கொடுமையான சங்கீதமாக இருந்தா தாவரங்கள் நடுங்க ஆரம்பித்து விடுகிறன.

அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே நடந்த இந்த ஆராய்ச்சியை தொடர்ந்து ..

வெளி நாடுகளிலேயும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நடந்தது .இல்லியான்ஸ்லே ஜே.ஈ.சிமித் என்னும் விஞ்ஞானி சில ஆராய்ச்சிகளை செய்தார்.

அவர் இந்த அவரை, மக்காச்சோளம் இது போன்ற பயிர்களிலே ஆராய்ச்சி பண்ணினார்.கடைசியில் என்ன சொன்னார் தெரியுமா ?

"இனிமையான சங்கீதத்தை கேட்ட பயிர் அதிகமாக விளைகிறது !

கொடுமையான சங்கீதத்தை கேட்ட பயிர் குறைவாக விளைகிறது என்று சொன்னர்" அது சரி ..

விவசாயத்தில விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு சங்கீதத்தை உபயோகப்படுத்தினால் என்ன?

அதிலே ஒரு சிக்கல் .. அதாவது, சங்கீதத்துக்காக நாம செலவு செய்கிற தொகையை விட அந்த சங்கீதத்தை கேட்டு அதனாலே விளைகிற அதிகபடியான விளைச்சல் குறைவாகத்தான் இருக்கும்.

அதாவது,சங்கீதத்தை ஏற்பாடு செய்வதற்காக 100 ரூபாய் அதிகபடியாக விவசாய செலவு செய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்! அதனாலே நமக்கு அதிகமாக விவசாயத்தில கிடைக்கிற பணம் 25 ரூபாய் என்றால் அதனாலே நமக்கு என்ன பிரயோசனம்? 100 ரூபா செலவு பண்ணி அதனாலே 25 ரூபாய் சம்பாதிக்கிறதில என்ன இலாபம்?

இருந்தாலும் இதைப்பற்றி எல்லாம் தொடர்ந்தும் ஆராய்ச்சி நடக்கணும்.

சில இடங்களில் பால் பண்ணைகளில் இனிமையான இசையை போடுறாங்களாம்..அதைக்கேட்டு கொண்டே மாடுகள் எல்லாம் அதிகமாக பால் கறக்குதாம்.!

ஆடு,மாடு ,செடி கொடி எல்லாம் இசையை ரசிக்கிது என்று தெரிந்து போய்விட்டது!

அதனாலே இனிமேல் அலட்சியமாக அதன் பக்கத்தில் நிற்கும் பொழுது பாட்டுப் பாடுவதற்கு முயற்சி செய்ய கூடாது சேர்...அதற்கு வாய் என்று ஒன்று இல்லாத காரணத்தாலே என்ன பாடினாலும் அது பேசாம இருக்குது , சகிச்சுக்கிட்டு இருக்கு.இருந்தாலும் அதன் மனசு என்ன பாடுபடும். அதுக்கு மனசு வேற இருக்குதா என்று கேக்கிறீங்களா? இருக்குது சேர் தாவரங்களுக்கு வலி,பயம்,இன்பம், துன்பம்,விருப்பு,வெறுப்பு இது மாதிரி நுண்ணிய உணர்வுகள் உண்டு.

இப்போதைக்கு நான் சொல்லி வைக்கிறது இது தான். நாமெல்லாம் இனிமேல் தாவரங்களுக்கு பக்கத்திலே நின்று கொண்டு அது தான் பக்கத்தில யாருமே இல்லை என்னும் நினைப்பில் பாட்டுப்பாடுறது தப்பு .அதுவும் முக்கியமாக தென்னை மரத்தின் அடியிலே நின்று கொண்டு பாடக் கூடாது!அந்த மரத்துக்கு சகிச்சுக்க முடியாம ஒரு நிலைமை வந்து ..இனி மேல் நம்மாலே தாங்க முடியாது என்று நினைத்து ...உச்சியிலேயிருந்து ஒரு தேங்காயை தள்ளி விட்டா உச்சந்தலை என்னத்துக்காகும்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 06.02.2024 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் 99 கியூப் மணல், 12 கியூப் ஊத்தை மண் என்பன ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணல், ஊத்தை மண் என்பவற்றை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலயம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும் என மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

# ப.நோ.கூ சங்கங்களை நெல் கொள்வனவில் ஈடுபடுத்த செய்யுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபடாததன் காரணமாகவே உரிய விலையினை நெல்லுக்கு விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபடுவதில்லை. இதன் காரணமாக தனியார்கள் இடைத்தரகர்களின் உதவியுடன் மிகக் குறைந்த விலையில் நெல்லினை கொள்வனவு செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

அறுவடைகள் தொடங்கும் முன்னரே நெல்லிற்கு நியாய விலையினைப் பெற்றுத் தருமாறு விவசாயிகளினால் மாவட்டச் செயலாளரிடம் மனுக்கள் கையளிக்கப்பட்ட போதும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை.

இதன் காரணமாக குறைந்த விலையில் நெல்லினை விற்பனை செய்கின்ற பரிதாப நிலையில் விவசாயிகள் காணப்படுகின்றனர்.

எனவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபடுவதன் மூலம் நெல்லுக்கு உரிய விலையை விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும். அதிகாரிகள் குறித்த விடயத்திற்கான தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

## இடியன் வெடித்து ஒருவர் காயம்

(தருமபுரம்)

சந்தேக நபரொருவரை கைது செய்வதற்கு துரத்திய போது கட்டுத்துவக்கு வெடித்ததில் தருமபுர பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் தருமபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (நி-5-6-316)

# நடைபாதை வியாபார நிலையங்கள் வவுனியா நகரசபையால் அகற்றம்



(குருமன்காடு)

வவுனியா சந்தைச் சுற்றுவட்டவீதியில் அமைந்துள்ள நடைபாதை வியாபார நிலையங்கள் நகரசபையால் நேற்று அகற்றப்பட்டது.

வவுனியா பொது மருத்துவமனை சந்தியில் இருந்து கொறவப்பொத்தான வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி ஆகியவை நடைபாதை வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பாதசாரிகள் சிரமங்களுக்கு உள்ளாவதோடு அடிக்கடி வாகன நெரிசல் ஏற்படுவதால் விபத்துக்களை சந்திக்கும் நிலைமையும் காணப்பட்டது.

இந்நிலையில் சந்தைச் சுற்றுவட்ட வீதிக்கு சென்ற வவுனியா நகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் போக்குவரத்து பொலிஸார் நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றியதுடன் வியாபாரிகளினது பொருட்களையும் பறிமுதல் செய்தனர். இதேவேளை கொறவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள நடைபாதை விற்பனை நிலையங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கையினை நகரசபை எடுக்கவேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (நி-5-6-250)

# நிறுவை அளவு கருவிகளுக்கு முத்திரை பதிக்கும் வேலைத்திட்டம்



(கண்டாவளை)

வர்த்தக நிலையங்களில் பொருட்கொள்வனவில் ஈடுபடும் நுகர்வோரை பாதுகாக்கும் வகையில், வருடாந்தம் நிறுவை அளவு கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகளை அளவீட்டு அலகுகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில், கிளிநொச்சி மாவட்ட வர்த்தக நிலையங்களில் உள்ள நிறுவை அளவு கருவிகளுக்கு இவ்வருடத்திற்கான முத்திரை பதிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வேலைத் திட்டம், மாவட்ட செயலக வளாகம் இரண்டில் அமைந்துள்ள அளவீட்டு அலகுகள் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது 12 மாத காலப் பகுதியில் முத்திரையிடாத வர்த்தகர்கள் தராசுகளுக்கு முத்திரையிட்டுக் கொண்டனர்.

இவ்வாறு முத்திரையிடப்படாது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் மீது 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

# போதைப்பொருள் பாவனையால் அதிகரிக்கும் குடும்ப வன்முறைகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனைகளாலே அதிகளவான குடும்ப வன்முறைகள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் அபிவிருத்தி, பால் மற்றும் பால் நிலை வன்முறைக்கு எதிரான விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் குடும்ப வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 89 வழக்குகளும் 2023 ஆம் ஆண்டில் குடும்ப வன்முறைகள் சம்பந்தமாக 863 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 166 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்திலிருந்து நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்திலேயே பேசித் தீர்க்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த வன்முறைகளின் பின்னணியில் போதைப்பொருள் பாவனையே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5-6-315)

# போதைவஸ்தை சிறுவனுக்கு உட்கொள்ள கொடுத்தவர்கள் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வண்ணாங்கேணி பகுதியில் சிறுவன் ஒருவருக்கு போதைப் பொருள் உட்கொள்ள கொடுத்த மூன்று இளைஞர்களை பளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில் குறித்த சிறுவன் கடைக்கு சென்ற வேளை வீதியில் போதையில் இருந்த இளைஞர்கள் மூவர் சிறுவனை வலுக்கட்டாயப்படுத்தி போதைவஸ்தை உட்கொள்ள வைத்து கிணற்றுக்குள் தூக்கி வீச முற்பட்டுள்ள வேளை அவ்விடத்திற்கு வந்த சிறுவனின் தாயாரால் சிறுவன் மீட்கப்பட்டான்.

குறித்த சம்பவத்தில் பாதிப்படைந்த சிறுவன் மயக்கமடைந்த நிலையில் பளை மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின் யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரையும் பளை பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி நீதிவானின் உத்தரவுக்கு அமைய 11நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (நி-5-6-350)

# பொலிஸ் வாகனம் மீது தாக்குதல் நடத்திய நபர் கைது

(குருமன்காடு)

வவுனியா புளியங்குளம் பொலிஸ் நிலைய வாகனத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்காக வாகனத்தில் பொலிஸார் சென்றுள்ளனர்.

இதன் போது குறித்த வாகனத்தின் மீது வீதியில் நின்ற நபர் ஒருவரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரை புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அந்நபரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-250)

# அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேகநபர் தப்பியோட்டம்

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேகநபர் ஒருவர் தப்பியோடியுள்ள நிலையில் குறித்த கைதியை கைது செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை தொடர்பில் நெளுக்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய இளைஞன் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் வவுனியா சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி சிறைச்சாலையில் இருந்த சந்தேக நபரான குறித்த இளைஞனுக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக மாவட்ட பொது மருத்துவமனையில்சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி அன்று காலை மாவட்ட பொது மருத்துவமனையிலிருந்து தப்பியோடியுள்ளார். தப்பியோடிய குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் காவியத் தொடர்

பாகம் - 2

396





அநுராதபுரத்துக்கு வெளியே சாலை ஓரத்தில் நின்ற புத்தர் சிலையின் தோற்றம் வந்தியத்தேவனுடைய மனக் கண் முன்னால் வந்தது. 'சிலையின் அடிப்பீடத்தில் வரிசையாக வைத்திருந்த தாமரை மொட்டுக்களை இளவரசர் எண்ணிப் பார்த்துப் பன்னிரண்டு என்று சொன்னார். அவை பன்னிரண்டு நாழிகையைக் குறித்தன போலும். தாமரை மலர்களாயிராமல் மொட்டுக்களாயிருந்த படியால் இரவைக் குறித்தன போலும்! அந்த மொட்டுக்களுக்கு அருகில் இருந்த சிங்க முகத்துக் கிண்டியும் வந்தியத்தேவனுடைய நினைவில் இருந்தது. அந்தப் பாத்திரம் இந்தச் சிங்க முக அருவி விழும் தடாகத்தை குறிப்பிட்டது போலும்!'

'இதெல்லாம் சரிதான்! ஆனால் இங்கு எதற்காக, யார் இளவரசரை வரச் செய்திருக்கிறார்கள்? இதில் என்னென்ன அபாயங்கள் நேரிடுமோ, என்னமோ தெரியவில்லையே? ஆயுதம் ஒன்றும் கொண்டுவரக் கூடாது என்று இளவரசர் தடுத்ததின் கருத்து என்ன? ஒரு வேளை இங்கு ஏதேனும் காதல் நிகழ்ச்சி நடைபெறப் போகிறதோ?'

இந்த நினைவு வந்ததும் வந்தியத்தேவனுடைய உள்ளம் கொந்தளித்தது. அவனுடைய மனம் கடல் கடந்து பழையாறைக்குப் பாய்ந்து சென்றது. இளைய பிராட்டியும், வானதி தேவியும் அவன் மனக்கண் முன் வந்தார்கள்.

இளவரசரின் வாயைப் பிடுங்கிப் பார்க்கலாம் என்று வந்தியத்தேவன் எண்ணினான். "ஐயா! இந்த இடத்தைப் பார்த்தால் பழைய காலத்து அரண்மனை நந்தவனம் மாதிரி அல்லவா தோன்றுகிறது!" என்றான்.

"ஆம் இது அரண்மனை நந்தவனம் இருந்த இடந்தான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நந்தவனத்தை யொட்டி துஷ்டகமனுவின் அரண்மனை இருந்தது. அதோ பார்! இன்னமும் இந்த அரண்மனையில் சில பகுதிகள் அழியாமல் இருக்கின்றன!" என்றார்.

வந்தியத்தேவன் அங்கே சற்றுத் தூரத்தில் தெரிந்த பழைய அரண்மனை மாடங்களைப் பார்த்துவிட்டு, "அந்தக் கட்டிடங்கள் அரண்மனை அந்தப்புரமாயிருந்திருக்கலாம். இந்தத் தடாகத்தில் அரசிளங்குமரிகள் இறங்கி ஜலக்கிரீடை செய்து மகிழ்ந்திருப்பார்கள்!" என்றான்.

"இந்த நந்தவனத்திலே நடந்த அதிசயமான சம்பவம் வேறு ஒன்று உண்டு. ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் நடந்தது. துஷ்டகமனு மன்னனின் புதல்வன் ஸாலி என்பவன் இங்கே ஒருநாள் உலாவிக் கொண்டிருந்தான். ஒரு பெண் இந்தத் தடாகத்தில் தண்ணீர் மொண்டு புஷ்பச் செடிகளுக்கு ஊற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். அந்தப் பெண்ணிடம் காதல் கொண்டான். அவள் ஒரு சண்டாளப் பெண் என்றும், அவள் பெயர் அசோகமாலா என்றும் அறிந்தான். சண்டாளப் பெண்ணாயிருந்தாலும் அவளையே மணந்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தான். 'அப்படியானால் நீ சிம்மாசனம் ஏற முடியாது!' என்று தந்தை கூறினார். 'சிம்மாசனம் வேண்டாம் எனக்கு அசோகமாலா தான் வேண்டும்' என்று ஸாலி வாஹனன் பிடிவாதமாகக் கூறி விட்டான். இந்த உலகத்தில் இன்னொரு ராஜகுமாரனால் இப்படிக் கூற முடியும் என்று தோன்றுகிறதா?"

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறியபோது, கோடிக் கரைக் கடலில் படகு செலுத்திய சமுத்திர குமாரியின் நினைவு வந்தியத்தேவனுக்கு வந்தது. ஆகா! ஒரு வேளை இவரும் அந்தப் பெண்ணை நினைத்துக் கொண்டுதான் இந்தக் கதையைச் சொல்லுகிறாரா, என்ன?

பூங்குழலியின் பேச்சை எப்படி எடுக்கலாம் என்று அவன் எண்ணிக் கொண்டிருந்த போது, அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. சிங்க தாரைத் தடாகத்தின் பின்புறச் சுவரில், உட்பக்கம் குழிவாக அமைந்து, அதற்குள்ளே இருவர் அமரும்படியான ஒரு கல் ஆசனம் இருந்தது. அப்படி அமைந்திருந்த அறையின் ஓர் ஓரத்தில் திடீரென்று விளக்கு வெளிச்சம் காணப்பட்டது.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### ஓநாயும் வீட்டு நாயும்



ஒரு ஓநாய் கிராமத்துக்கு பக்கத்துல இருக்குற காட்டுக்குள்ள வாழ்ந்துக்கிட்டு வந்துச்சு.

அது ரொம்ப பஞ்சமான காலம் என்றதனால ரொம்ப நாளாகவே அந்த ஓநாய்க்கு சரியான வேட்டையும் சாப்பாடும் கிடைக்கல.

எலும்பு துண்டுகளை சாப்பிட்டு வாழ்ந்து வந்தது அந்த ஓநாய். ஒரு நாள் அதுக்கு ரொம்ப பசிச்சுச்சு.

அதனால கிராமத்துக்குள்ள போயி ஏதாவது உணவு கிடைக்குமான்னு பார்த்துச்சு ஓநாய்.

அங்க நிறைய வீட்டு நாய்கள் இருக்குறத பார்த்துச்சு. அதுங்க எல்லாம் நல்லா சாப்பிட்டு குண்டா இருக்குறத பார்த்துச்சு ஓநாய்.

இந்த நாய்களுக்கு தினமும் நல்ல சாப்பாடு கிடைக்கும் போலன்னு நினைச்ச ஓநாய் ஒரு வீட்டு நாய்க்கிட்ட போய் பேசிச்சு.

நீங்க தினமும் வேட்டையாடுவீங்களா? வேட்டையாட மிருகங்க[illegible] இந்த கிராமத்தில நிறைய இருக்கா என்று அந்த வீட்டு நாய்க்கிட்ட கேட்டுச்சு.

அதுக்கு கலகலன்னு சிரிச்சிச்சு அந்த வீட்டு நாய். வீட்டை காவல் காக்குற எங்களுக்கு வேட்டையாட அவசியம் கிடை[illegible] முதலாளியே தினமும் இறைச்சி சாப்பாடு கொடுப்பாருன்னு சொல்லிச்சு.

அதை கேட்ட ஓநாய்க்கு அதிசயமா போச்சு. உடனே அந்த வீட்டு நாய் நீங்களும் எங்க கூடவே இருங்க. உங்களுக்கும் தினமும் சாப்பாடும் நிறைய ஓய்வும் கிடைக்கும்ன்னு சொல்லிச்சு.

அப்பத்தான் அந்த வீட்டு நாயோட முதுகில ஒரு வெட்டும் கழுத்துல ஒரு தளும்பும் இருக்குறத பார்த்துச்சு ஓநாய்.

உடனே எப்படி இந்த வெட்டும் தளும்பும் வந்துச்சுனு கேட்டுச்சு ஓநாய்.

அதுக்கு அந்த வீட்டு நாய் சொல்லிச்சு. ஒரு நாள் சேட்டை செஞ்சதால எங்க முதலாளி ஒரு தடியை எடுத்து அடிச்சாரு. அதனால அந்த வெட்டு விழுந்துச்சு.

தினமும் ராத்திரி நாங்க வெளிய போகக் கூடாதுன்னு கழுத்துல சங்கிலி போட்டு கட்டி வச்சிடுவாங்க. அந்த தளும்புதான் இதுன்னு சொல்லிச்சு.

அப்பத்தான் ஓநாய்க்கு புரிஞ்சது எவ்வளவு உணவு கிடைச்சாலும் தனக்கு இருக்கிற சுதந்திரம் இந்த நாய்களுக்கு கிடையாதுங்குறத உணர்ந்துச்சு.

உடனே நல்ல உணவு கிடைக்கலைனாலும் தனக்கு இருக்கிற சுதந்திரம் ரொம்ப பெருசு என்று புரிஞ்சிக்கிட்டு அங்க இருந்து திரும்ப காட்டுக்குள்ள ஓடி போய்டுச்சு.

அப்ப அந்த ஓநாய்க்கு கொஞ்சம் உணவு கிடைத்தாலும் சுதந்திரமாக இருக்கிற உணர்வு அதுக்கு இருந்த கவலையை எல்லாம் போக்கிடிச்சு.

நீதி : சுதந்திரத்தைப் போல மதிப்புக்குரியது எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈனத்தனம் செய்தவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்

மனிதப் பாவனைக்கு உதவாத மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு நாட்டின் சுகாதார அமைச்சர்; மனிதப் பாவனைக்குதவாத மருந்துப் பொருட்களின் இறக்குமதிக்கு ஒப்புதல் வழங்குகிறார் எனில் அதைவிட்ட ஈனத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

உண்மையில் இந்த நாட்டில் இருக்கக்கூடிய 80 சதவீதமான மக்கள் இலவச வைத்தியசாலைகளையே நம்பியுள்ளனர்.

அதிலும் ஏழை மக்கள் முற்று முழுதாக இலவச வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெறுகின்றனர்.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துப் பொருட்கள் தரமற்றவையாக – மனிதப் பாவனைக்கு உதவாததாக இருக்குமாயின், அதன் விளைவு அப்பாவி மக்களின் மரணமாகவே இருக்கும்.

ஆக, மனிதப் பாவனைக்கு உதவாத மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதனூடாக மிகப்பெரும் ஊழல் நடந்திருக்கும் என்று அனுமானிப்பதில் தவறில்லை.

அதாவது பாவனைக்குதவாத மருந்துப் பொருட்களால் அப்பாவி மக்கள் உயிரிழந்தாலும் பரவாயில்லை என்று எண்ணுகின்றவர்கள் தேசத்துரோகிகள்.

தவிர, மனிதப் பாவனைக்குதவாத மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்ற தகவலை யாரெல்லாம் அறிந்திருந்தும் அதனைப் பகிரங்கப்படுத்தத் தவறினார்களோ, அவ்வாறான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதில் யாரெல்லாம் சம்பந்தப்பட்டுள்ளார்களோ அவர்கள் அனைவரும் கைது செய்யப்படுவதுடன் மக்கள் சமூகத்தைக் கொலை செய்கின்ற இக்கொடும் செயலைச் செய்தவர்கள் மரண தண்டனைக்குரிய குற்றவாளிகள் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஆம், ஹெகலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருப்பதற்குப் பொருத்தமற்றவர் எனப் பலர் எடுத்துக்கூறியிருந்தும் அவரை சுகாதார அமைச்சராக நியமிப்பதென்பதற்குள் மிகப்பெரும் உள்நோக்கம் உண்டென்பது உணர்தற்குரியது.

அதிலும் ஹெகலிய ரம்புக்வெலவின் பின்னணி, அவரை சுகாதார அமைச்சராக நியமிக்குமாறு கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் ஆய, விடயங்கள் இங்கு பரிசீலனைக்குரியவை.

ஏனெனில் மனிதப் பாவனைக்கு உதவாத மருந்துப் பொருட்களின் இறக்குமதி என்பது ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைவிட மிக மோசமானது.

அதாவது மனிதப் பாவனைக்கு உதவாத மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்வது மற்றும் குறித்த மருந்துப் பொருட்களை நோயாளர்களுக்கு வழங்கி அவர்களை மறைமுகமாகக் கொல்வது என்ற இரு பெரும் தேசத்துரோகம் இதற்குள் உள்ளடங்கியுள்ளது.

எனவே மனிதப் பாவனைக்குதவாத மருந்துப் பொருட்களின் இறக்குமதி தொடர்பில் சுகாதார அமைச்சராக இருந்த ஹெகலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டதுபோல, அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்படுவதுடன் உண்மையான குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதும் உறுதி செய்யப்பட வேண்டும்.

# டெங்குத் தாக்கத்தில் யாழ். மாவட்டம் முன்னிலை

## கட்டுப்படும் சாத்தியமும் ஏற்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த மாதத்தில் மட்டும் 2,500 பேர் டெங்குத் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலேயே தற்போது அதிக டெங்குத் தாக்கம் நிறைந்த மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டம் உள்ள நிலையிலேயே அதிகளவானோர் டெங்குத் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளனர்.

இதில் யாழில் உள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிக பட்சமாக யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் மட்டும் கடந்த ஜனவரி மாதம் 750 பேர் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர்.

இதேநேரம் குடாநாட்டில் இரண்டாவது தாக்கம் நிறைந்த பகுதியாக கரவெட்டியில் 194 பேர் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர்.

3 ஆவது பிரதேசமாக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு காணப்படுகின்றது. இதே நேரம் டெங்கின் தாக்கம் உடன் கட்டுப்படும் ஏது நிலை காணப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ந-7)

# ஹெகலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## மீண்டும் கொண்டுவர எதிர்க்கட்சி முடிவு

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவரவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சர் ரம்புக்வெல்லவுக்கு எதிராக இரண்டாவது நம்பிக்கையில்லாப் பிரேரணைய்யைக் கொண்டுவர எமது கட்சி தீர்மானித்தது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைக்கப் போகிறார் என்பதை அறிந்து நாங்கள் கையெழுத்து சேகரிக்கும் பணியை ஆரம்பிக்காது விட்டோம்.

எவ்வாறாயினும், பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளமையால் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பம் வாங்கும் பணியை மீண்டும் ஆரம்பிப்போம்.

ஊழலுக்குத் துணை போவது யார்? எதிராக நிற்போர் யார் என்பதை பொதுமக்கள் அறியும் வகையில் கையெழுத்து விபரங்களை இம்முறை பகிரங்கப்படுத்துவோம்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கும் மனித இம்யூனோகுளோபுலின் மோசடிக்கும் தொடர்பு இருப்பது நீதிமன்றில் வெளியாகும் தகவல்களின் படி தெளிவாகப் புலப்படுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை நேற்றைய தினம் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# இலங்கைத் தாய்க்கு மீண்டும் விடிவு கிட்டும்

## ஜனாதிபதி ரணில் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பாதை உலகத்திற்கு நம்பிக்கை ஏற்படுத்தியிருப்பதால் இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும், மீண்டும் சுபீட்சத்தைக் கொண்டு வரவும் இந்த சுதந்திர தினத்தில் உறுதி கொள்வோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும்போது, வங்குரோத்தடைந்த நாடு என்று முத்திரை குத்தப்பட்டிருந்தோம். ஆனால், 76 ஆவது சுதந்திர தினத்தில், பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும், அந்த நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான இடத்திற்குக் கொண்டுவர முடிந்துள்ளது.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள், துன்பங்களைச் சகித்துக்கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நீண்டகால வேலைத்திட்டத்திற்கு ஆதரவளித்ததால் எம்மால் மெதுவாக முன்னேற முடிந்தது.

இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லும் போது, சிரமங்கள் யாவும் மறைந்துவிடும், வாழ்க்கைச் சுமை குறையும், பொருளாதாரம் வலுவடையும். இலங்கை தாய்க்கு மீண்டும் விடிவு கிட்டும்.

நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பெருமை மிக்க பணிக்கு இலங்கையிலும் நாட்டுக்கு வெளியிலும் வாழும் அனைத்து இலங்கையர்களும் தங்களால் முடிந்தளவு பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** மக்கள் வங்கி -ஸ்ரான்லி வீதி, ராஜா தியேட்டர், கஜமுகன் வன்பொருள் வளாகம், லிங்கம் கிறீம் ஹவுஸ், என்.எஸ்.ஆர் வளாகம், மணிக்கூட்டு கோபுர வீதி-ஸ்ரான்லி வீதி சந்தி, பழைய தபால் அலுவலக ஒழுங்கை ஸ்ரான்லி வீதி, றொசல் கட்டடம், விலிங்டன், வின்சர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அவறந்துலாவா, நவகம்மானே, பாவற்குளம், பழையனூர், பெரிய உளுக்குளம், தீவரகம், இராஜேந்திரகுளம், சூடுவெந்தபுலவு கோபுரம், சூடுவெந்தபுலவு, துடாரிக்குளம், ட்ராக் 07-பாலற்குளம், உளுக்குளம்,உளுக்குளம் எல்.பி குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

15

### வன்னிப் பிரதேசம்

வன்னிப் பிரதேசம் வன்னியரின் ஆட்சியின் கீழ் விளங்கியது. அவர்கள் ஆண்டு தோறும் குறிப்பிட்ட யானைகளை ஒல்லாந்தருக்குத் திறையாகக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாக இருந்தனர். எனினும், வன்னியர் அடங்காப்பிடாரிகளாகவே நடந்தனர். ஒல்லாந்தரும் அவர்களுடைய நடத்தையைப் பராமுகமாக விட்டனர். ஏனெனில், அவர்களை அடக்க முயன்றால் அவர்கள் கண்டியரசனுடன் இணைந்துவிடக்கூடும் என்ற அச்சம் ஒல்லாந்தரின் மனதில் இருந்தது.

### காலி கொமாண்டரி

காலிக் கொமாண்டரி பெந்தொட்டை ஆற்றிலிருந்து வளவை கங்கை ஈறாகவும், தரை மார்க்கமாகப் பிற்றிக்கல, பெரலபனத்தற, மாப்பலகம, கட்டுவான எனும் இடங்கள் வரை வியாபித்துச்சென்றது. இம்மாநிலத்தின் திசாவை "மாத்தறைத் திசாவை" என அழைக்கப்பெற்றான். அவனது இல்லம் மாத்தறையிலேயே அமைந்தது.

### கொமாண்டரி பரிபாலனம்

ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள கொமாண்டரியும் உயர் உத்தியோகத்தரை உள்ளடக்கிய ஒரு பேரவையினால் பரிபாலிக்கப்பட்டது. இப்பேரவையில் அதிகாரம்மிக்கவராகக் காணப்பட்டவர் திசாவை என அழைக்கப்பட்டார். இவர் கொமாண்டரிக்கு அடுத்து இரண்டாம் நிலையில் அதிகாரம் உடையவராகத் தொழிற்பட்டிருந்தார். கொமாண்டரி தனது நிர்வாகச் சுற்றுலாவை மேற்கொள்ளும் போதும், அலுவலகத்திற்கு வெளியே உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு அதிகநாட்கள் வெளிக்களக் கடமைகளைக் கவனிக்கும் போதும் திசாவை அவருடைய பணிகளை அலுவலகத்தில் ஆற்றி வந்தார். ஒவ்வொரு கொமாண்டரியிலுமுள்ள பேரவையானது, ஆள்பதிக்கு அரசியல் பேரவை உதவுவது போன்று கொமாண்டரிக்கும் உதவி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய நிர்வாக நகரங்களின் தொலைவான அமைவிடங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் வாணிப நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தின் பின்னணியில் ஒவ்வொரு நகரத்திற்கும் ஒப்பர்கூவ்ட் என்றழைக்கப்பட்ட நிர்வாகியை அவ்வவ் நகரங்களின் திசாவைக்கு அடுத்த நிலையில் உள்ள உத்தியோகத்தராக நியமித்திருந்தனர்.

ஒப்பர்கூவ்ட் என்ற உத்தியோகத்தர் ஒப்பீட்டடிப்படையில் தனது சேவைக் காலத்தால் மூப்புடையவராகவும், ஒரு சிறிய சபையின் உதவியோடு தனது நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பவராகவும் காணப்பட்டார். கல்பிட்டி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்கள் ஒப்பர்கூவ்ட் என்ற நிர்வாகியாலேயே நிர்வகிக்கப்பட்டது.

### திசாவையும் உள்ளூர் நிர்வாகமுறையும்

திசாவை என்ற அலுவலகமே பல வழிகளிலும் உள்ளூர் நிர்வாகத்தின் திறவுகோலாக விளங்கியது. இந்நாட்டு மக்களுடனான பல்வகைப்பட்ட தொடர்புகளை ஆட்சியாளர் ஏற்படுத்திக்கொள்வதற்கு உரிய ஓர் ஊடகமாக - நிறுவனமாக திசாவை என்ற அலுவலகமே பாதை வகுத்துக் கொடுத்திருந்தது. சிங்களப் பிராந்தியங்களில் நிலவிய புராதன நிர்வாக முறையான திசாவை என்ற அலகினை போர்த்துக்கேயர் தமது காலத்திலிருந்து நிர்வாக முறையில் இணைத்துக் கொண்டிருந்ததோடு, அவர்களே அம்முறையை ஒல்லாந்தருக்கும் கையளித்தவர்களாகக் காணப்பட்டனர்.

திசாவை என்ற நிலை எப்பொழுதுமே தன்னுடன் இராணுவ, பொருளாதார, வரி, நீதி நிர்வாக அலகுகளை பரிபாலிக்கும் பொறுப்புக்களைக் கொண்டிருந்தது. எல்லா வகையான இராணுவப் பதவிகளின் நியமனம், போன்றவற்றை அந்தந்தப் பிராந்தியத்தில் மேற்கொள்ளுபவர்களாகவும் திசாவை அதிகாரிகள் விளங்கினர். ஒல்லாந்தரது பாவனையில் காணப்பட்ட எல்லா வகையான சட்டங்களதும், நடைமுறைகளதும், சுதேச இராணுவக் கட்டமைப்பினதும் உருவாக்கத்திற்கு திசாவையே முழுப்பொறுப்புமாக விளங்கினான்.

விசேடமாக திசாவை லஸ்கரின்கள் என்ற ஆயுதப் படையைப் பராமரிப்பதற்கும், அதனைப் பலமுடையதாகவும், ஓர் ஒழுங்கிலும் வைத்திருப்பதற்கான பொறுப்பினைக் கொண்டிருந்தான்.

விவசாய அபிவிருத்தி, வேளாண்மை விருத்தி மற்றும் பெருந்தோட்ட விருத்தி போன்ற நடவடிக்கைகளுக்கு திசாவையே மூலகர்த்தாவாக அமர்ந்து செயற்பட்டிருந்தார். 18 ஆம் நூற்றாண்டின் இலங்கையில் திசாவைகளே நெல் உற்பத்தியின் விரிவாக்கத்திற்கும், புதிய புதிய பயிர்வகைகளின் அறிமுகத்திற்கும், குறிப்பாக கோப்பி, கறுவா போன்றனவற்றின் அபிவிருத்திக்கும் திசாவையே முழுப்பொறுப்பாக விளங்கினான்.

திசாவையே சுதேசிய மக்களுடனான தொடர்பினைக் கொண்டிருப்பவனாகவும் காணப்பட்டார். இவரே லாண்ட்றாட்டினுடைய (Landraad) தலைவராகவும், மற்றைய உத்தியோகத்தர்களுடன் இணைந்த வகையில் வழக்குகளை பின்தள்ளி வைத்தவராகவும் தொழிற்பட்டிருந்தார்.

இலங்கையிலுள்ள திசாவாணிகளில் உள்ள தேவாலயங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலைகளின் மனேஜராகக் கூட திசாவை தொழிற்பட்டிருந்தார். திசாவை ஒவ்வொருவரும் தத்தமது ஆளுமைக்கேற்ப பாடசாலைகளின் தலைமைத்துவத்தை நடாத்தி வந்தனர். இவ்வாறு பலவழிகளிலும் அவர் பங்காற்றி, தொழிற்பட வேண்டியிருந்ததினால் மக்கள் மத்தியில் திசாவையை மிகவும் சக்தி வாய்ந்த ஒரு தனி நபராகவோ அல்லது உத்தியோகத்தராகவோ மதிக்கப்பட வேண்டிய நிலையும் உருவாகியது. தத்தமது எல்லாப் பிரிவுகளுக்கும் திசாவையும், அவரது உதவியாட்களும் அடிக்கடி சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டு, நிர்வாகச் சீர்கேடுகளை மேம்பாடடையச்செய்து வந்துள்ளனர்.

இந்நாட்டு மக்களுடைய பண்பாட்டினையும், வாழ்க்கை முறைகளையும் விளங்கிக் கொள்வதற்கும், பழகிக் கொள்வதற்கும் ஏற்ற புத்தி சாதுரியம், தரம் இவை இரண்டையுமுடைய நிர்வாகிகளை திசாவையின் அலுவலகமே உருவாக்கித் தந்தது. அந்தந்தப் பிரதேசத்து மொழிவழக்கினை, மொழியறிவினை விசேடமாகக் கற்றுக் கொள்ளுவதில் திசாவையின் அலுவலகமே மிகவும் ஆர்வம் காட்டியிருந்தது. ஒவ்வொரு உத்தியோகத்தரையும் கடமைக்காக நியமிக்கும் பொழுது மேற்கூறப்பட்ட தகைமைகள் பெரிதும் கருத்தில் எடுக்கப்பட்டன.

18 ஆம்நூற்றாண்டின் நடுப்பகுதியில் திசாவை மிகக் கூடுதலான நிர்வாக நடவடிக்கைகளிலும் பொறுப்புக்களிலும் ஈடுபட்டதோடு, சிலவகையான நீதி, நிர்வாகக் கடமையை தன்னிடமிருந்து அப்புறப்படுத்துவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டமையைக் காணலாம்.

பாரம்பரிய நிர்வாக அலகான ஒவ்வொரு திசாவனியும் கோறளை, பற்று, கிராமம் என வகுக்கப்பட்டு அவைமுறையேமுதலியார், கோறளை, அத்துக்கோறளை ஆகிய பிரதான நிர்வாகிகளின் பெயரால் நிர்வகிக்கப்பட்டு வந்த முறையையும் காணலாம். ஒவ்வொரு கிராமத்திலும் விதானை என்ற அதிகாரியே அக்கிராமங்களின் நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளைப் பரிபாலித்து வந்தமையைக் காணலாம்.

ஒவ்வொரு கிராமத்திலுமிருந்து சேரவேண்டியிருந்த வருமான மீதியைச் சேகரித்து அரசுக்கு அனுப்பி வைப்பதும் விதானையினது பொறுப்பாக விடப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள தனிப்பட்டவர்களாலும், இலவச அடிப்படையில் அரசுக்கு வழங்க வேண்டியிருந்த சேவைகள், கடமைகள், மானியங்கள் போன்றவற்றை கவனிக்கவேண்டியிருந்த பொறுப்பும் இவ்வுள்ளூர் விதானைக்குரியதாக இருந்தது. இவர்கள் தமக்குக் கிட்டிய திசாவையினது மேற்பார்வையிலேயே அக்கடமைகளை ஆற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு குறிப்பிட்ட கிராமத்திலுமுள்ள மக்கள் மூலமாக ஒரு குறிப்பிட்ட வகைப் பயிரை உற்பத்திப்படுத்த வேண்டிய நிலை காணப்பட்டால், அது பற்றிய தொடர்ச்சியான சங்கிலித் தொடர் போன்ற ஆணையை திசாவையிலிருந்து முதலியாருக்கும், பின்னர் முதலியாரிலிருந்து கோறளைக்கும், பின்னர் விதானைக்குமாக அவ்வாணை வந்து சேரும். இதே போன்று கட்டிட நிர்மாணவேலைகளுக்குத் தொழிலாளர்கள் தேவைப்பட்டால் அதே போன்ற ஆணை கிராமத்தினை நோக்கி விதானையே வந்தடையும். அங்கிருந்து அவர் தேவைப்பட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் நடைமுறையைக் கையாள்வார்.

முதலியார் என்ற பதவிக்குரியவர் லாண்ட்றாட் என்ற அலுவலகத்தில் ஏனைய ஒல்லாந்த அதிகாரிகளுடன் அமர்ந்திருந்தே கிராமத்தினதும், பிரதேசத்தினதும், நாட்டினதும் மரபுகளையும், நிலச்சட்ட - திட்டங்களையும் பற்றி விளங்கிக் கொண்டிருப்பது மரபாக இருந்தது. ஒல்லாந்து உயர்நிர்வாக அமைப்பு முறையில் சுதேசத் தலைவர்களது வழிகாட்டலும், உதவியும் இன்றியமையாதது என உணரப்பட்டது.

ஆகையால் இலங்கையின் கடற்கரையோரத் தாழ்நிலப் பரப்பில் ஆளுநர்கள் மிகத் தொடக்க காலத்திலிருந்தே உள்ளூர்த் தலைவர்களின் நட்பைப் பெற்று, அவர்களது வழிகாட்டுதல்களை அரச நிர்வாகத்திற்காகப் பெற்று வந்திருந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

டன் இதேபோன்ற கலந்துரையாடல்கள் நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இலங்கைக்கான தனியார் கடன் வழங்குபவர்களின் அளவு மிகவும் கணிசமானது.

இந்தநிலையில் சர்வதேச நாணய நிதியம் அல்லது சீனாவின் பணத்தை மட்டும் இலங்கை நம்பியிருக்க முடியாது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, அடுத்த மீளாய்வுக்கு முன்னதாக, பத்திரதாரர்கள் மற்றும் சீன அபிவிருத்தி வங்கி உட்பட அதன் வர்த்தகக் கடன் வழங்குநர்களுடன் இலங்கை ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதாக அண்மையில் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் இலங்கை அரசாங்கம், தம்முடன் பேச்சுவார்த்தைகளில் தீவிரத்தை காட்டாது போனால், சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த மதிப்பாய்வு மற்றும் இலங்கைக்கான தவணைக் கொடுப்பனவைத் தடுக்க தனியார் கடன் வழங்குபவர்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னைய ஆட்சியை விட சிறப்பாக செயற்படுவார் என்ற நம்பிக்கையில் அனைவரும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

அவர் மீது நிறைய நம்பிக்கை இருந்தது, ஆனால் இப்போது அது மிகவும் ஏமாற்றமாக மாறுகிறது என்றும் தனியார் கடன் வழங்குநர் தரப்பைக் கோடிட்டு, மேற்படி செய்தித்தாள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இதேவேளை உள்நாட்டு அரசியல் மற்றும் வரவிருக்கும் தேர்தல்கள் காரணமாக தனியார் கடனாளிகளை கையாள்வதில் இலங்கை மிகவும் மெதுவான வேகத்தில் நகர்கிறது என்று தனியார் கடன் வழங்குநர்கள் சந்தேகிக்கின்றனர்.

விமர்சனத்திற்கு ஆளாக நேரிடும் என்ற அச்சத்தில் தனியார் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தம் செய்ய ஜனாதிபதி ரணில் விரும்பவில்லை" என்றும் தனியார் கடன் வழங்குனர் தரப்புக்கள் சந்தேகிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, அரசாங்க ஆலோசகர்கள் பிணைமுறி வைத்திருப்பவர்களின் ஆலோசகர்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

பத்திரம் வைத்திருப்பவர்கள் மற்றும் வணிகக் கடன் வழங்குபவர்கள் உட்பட அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் நன்மை பயக்கும் கடன் தீர்வை விரைவில் முடிக்க அரசாங்கம் விரும்புகிறது என்று அவர் கூறினார்.

கடன் பத்திரம் வைத்திருப்பவர்கள் தமக்கு மிகவும் முக்கியமானவர்கள் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ந-7)

## 5ஆம் திகதி...

நிறுவனங்களும் வழமைபோன்று இயங்கும் எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார். (ந-7)

## சுகாதார...

பேச்சுவார்த்தை நடத்தப்படும் என உறுதியளித்ததையடுத்து இந்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார தொழிற்சங்கங்களுக்கும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கும் இடையில் நேற்று மதியம் சுகாதார அமைச்சில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35,000 ரூபாய் கொடுப்பனவை தங்களுக்கும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் முன்வைத்தன.

எனினும், இதற்கு உரிய தீர்வு வழங்கப்படாதமையினால், இணக்கப்பாடின்றி பேச்சுவார்த்தை முடிவுற்றது.

இது தொடர்பில் கருத்துரைத்த சுகாதார தொழில் சங்கங்களின் ஒன்றிணைந்த இணைப்பாளர் ரவி குமுதேஷ், தீர்வு எட்டப்படாவிடினும் பொது நலன் கருதி தற்காலிகமாக தமது போராட்டத்தை இடைநிறுத்த தீர்மானித்துள்ளோம்.

எனினும் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு இல்லாவிட்டால் எதிர்வரும் 7ஆம் திகதி மீண்டும் போராட்டம் மேற்கொள்ளப்படும் என்றார். (ந-7)

## புகையிரதத்தில்...

நேற்று மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி டிப்போ வீதியில் புகையிரத நிலையத்துக்கு அண்மித்துள்ள பாதுகாப்பான புகையிரத கடவை மூடப்பட்ட நிலையில், குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்துள்ளார்.

வீதியின் குறுக்கே இடப்பட்டிருந்த தடைக்குள்ளால் நுழைந்து சென்ற அவர், புகையிரதம் வரும் திசையை கவனிக் காமல், எதிர்த்திசையை மட்டும் பார்த்து விட்டு வீதியை கடக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது, அவரை புகையிரதம் மோதித்தள்ளியது. இதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விநாயகர் புரத்தைச் சேர்ந்த மதன் என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,100)

## பிரதம...

கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள தாய்லாந்துப் பிரதமர்,

திடீர் சுகயீனம் காரணமாக இலங்கைக்கான தனது இரண்டு நாள் விஜயம் ஒரு நாளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் கோரிக்கைக்கு மதிப்பளித்து தாம் சுமார் ஒரு மணி நேரம் சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்க உள்ளதாகவும் குறித்த அறிக்கைமூலம் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். (ந-7)

## நிகழ்...

மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டத்தினால் கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்துக்கு தடையேற்படும். இந்த சட்டத்தின் ஊடாக சிவில் சமூகம், கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல துறைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை மீள்பரிசீலனை செய்து சட்டத்தை திருத்தம் செய்ய இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தனது பதிவில் குறிப்பிட்டுள்ளது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.02.02
சீட்டிழுப்பு இலக்கம் 0204
D 5 5 8 5 6 3 D
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.02.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1408
U 17 18 26 65 U
Double Chance 40507

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3620
சீட்டிழுப்பு திகதி 02.02.2024
O 10 44 45 47
O 07934
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.02
சீட்டிழுப்பு இலக்கம் 0687
கன்னி 14 26 38 49 கன்னி
14716 12

மஹஜன சம்பத
திகதி 2024/02/02
சீட்டிழுப்பு இலக்கம் 5378
C 6 8 7 2 5 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1726
T 22 03 32 35 71
Double Chance 51183

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.02.2024 வெற்றி வாரம் 086
K 5 6 4 7 8 1
90016
ரூ. 28,198,588.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2352 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.02 தினம் வெள்ளிக்கிழமை
06 31 57 76 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,503,898.40
71700

சனிதா
திகதி 2024.02.02 வெற்றி வாரம் 4513
13 54 58 68 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,058,979.60
20466

சசிரி
436 2024.02.02 பச்சை
வெற்றி இலக்கங்கள் 03 17 33
06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,598,880/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4064 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.02 தினம் வெள்ளிக்கிழமை
21 37 49 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,211,080.00
669261

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 14 13 23 33 75
1528 02.02.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 501,178,406.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2178
சீட்டிழுப்பு திகதி: 2024.02.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,347,630.40
அத கோடிபதி ADA KOTIPATHI
01 29 30 32 N
456330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INFORMATION TECHNOLOGY PARK

*Jaffna, Srilanka*
*Under the purview of the*
*Ministry of Investment Promotion*

MPCS Building,
127,K.K.S.Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

2024 February Batch

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming
- Dip.in Wep Page Designing

06 Month Online Course

- Dip.in PC Application & Office Management

06 Month Languages

- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AutoCAD

20 hours Workshops

- Internet & e-mail
- Hardware

(C-8267)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 22.02.2024
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 24.02.2024

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*

---

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8271)

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவில் வைரவர் கோயில் சந்தி அருகாமை A9 வீதி இரண்டாம் காணி விற்பனைக்குண்டு.

- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் (10,00,000/=) ரூபாய்
- நிலப்பரப்பு

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம் :
காலை 8மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(18873)

**071 173 3911 | 076 853 5022**

---

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராச பாதையில் 12 அடி பாதையுடன் கூடிய 03 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

- இக் காணி கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ளது.
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
- பார்வையிடும் நேரம் : சனி, ஞாயிறு

தொடர்புகளுக்கு :

**077 921 3789**

(18862)

---

## விற்பனைக்கு

2 கிடாய் ஆடு, 2மறி ஆடு, 2 குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு

**077 203 0309**

(18874)

---

## O/L Paper Class - 2023

துரித மீட்டல் வினா விடை வகுப்பு

3 மாதத்தில் (G.C.E-O/L) பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பெற்றுக் கொள்வதற்கு நுட்பமான மீட்டல் வினா விடை வகுப்பு

ஆரம்பம் : 03.02.2024 சனிக்கிழமை
பி.பகல் 2.00 - 5.30 மணிவரை

- யாழ். மாவட்டத்தில் அதி முன்னணி ஆசிரியர் குழுவின் வழி நடத்தலில்...
- தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம்,
- வரலாறு ஆகிய முக்கிய பாடங்கள்.
- வாரத்தில் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.
- வெளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
- அனுமதிகள் இன்று முதல்...

(18858)

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 077 459 8440

---

## காணி விற்பனைக்கு

இராச வீதி முகப்புடன் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு

தொடர்புகளுக்கு: ஜெயம்

**077 814 7389**
**077 986 5457**

(18857)

---



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

# கதிர்காமு பசுபதி

கருணையம்பதி சனசமூக நிலையம்,
கருணையம்பதி மூத்த விநாயகர் திருமண மண்டபம்
முன்னாள் தலைவர், சமூக சேவையாளர்

மண்ணில் 25.04.1937
விண்ணில் 17.01.2023

அவர்களின் சிவபேறு குறித்த ஆண்டு திவச கிரியைகள் நாளை ( 04.02.2024 ) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மதிய போஷன நிகழ்வு **மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில்** நடைபெறும். இவ் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி** - பசுபதி மகேஸ்வரி மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
**மக்கள்** - பவானி, பவானந்தன், நித்தியானந்தன், கோகுலானந்தன், உமா
**பெறாமக்கள்** - தவனேசன், மஞ்சுளா, மகேந்திரன்
**மைத்துணன்** - சிவலிங்கம் -

074 012 2149, 6479266011

ஸ்ரீராம ஜெயம்
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(C-8268)

---

## காணி விற்பனைக்கு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணிதுண்டுகள் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பு - 3 இலட்சம்**

பார்வையிடும் நேரம் :
காலை 8.30 தொடக்கம் 6.00 வரை

விலை பேசித் தீர்மானிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு

**076 659 0583, 076 109 8504**

(18861)

---

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 269 /= | Max 3Kg |
| 1 Kg கோதுமை மா | - | 183 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 187 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 305 /= | Max 5Kg |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - | 429 /= | |
| 1 Kg அரிசி மா | - | 199 /= | |
| 1 Kg பெரிய கடலை | - | 619 /= | |
| 1 Kg றவை | - | 284 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | - | 164 /= | |
| 10 Kg விஜிதா ஆட்டக்காறி | - | 2110 /= | |
| 425g Supiri ரின்மீன் | - | 490 /= | ~~850/=~~ |
| 180g Protinex | - | 1799 /= | ~~2000/=~~ |
| 01 Lux Soap | - | 165 /= | ~~175/=~~ |
| 01 Sunlight soap | - | 140 /= | ~~150/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | | 50 /= | ~~80/=~~ |

1040/=




~~1080/=~~
Max - 02

(18872)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.